**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 46/2020**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில்குமார் | தொழில் | : துப்புரவு மேற்பார்வையாளர் |
| தந்தை பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | சமயம் | : |
| கிராமம் | : செஞ்சி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் செஞ்சியில் பேரூராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மூவேந்திர பாண்டியன் செயல் அலுவலராக செஞ்சி பேரூராட்சியில் பணிபுரிந்தவர். செஞ்சி பேரூராட்சி பகுதியில் அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்புகளை கண்டறிய செஞ்சி பேரூராட்சி செயல் அலுவலர் உத்தரவு செய்தார். அதற்கு முன்பாக கடலூரில் உள்ள உதவி இயக்குனர் செஞ்சி பேரூராட்சி பகுதியில் உள்ள அரசு ஆக்கிரமிப்பு பகுதிகளை அகற்ற கடிதம் அனுப்பியிருந்தார். அதன்படி தேசூர்பேட்டை சர்வே எண்.11/1 ல் அடங்கிய அரசு புறம்போக்கு பாட்டையில் 37 ச.மீ அளவுக்கு ஆஜர் எதிரி ஆக்கிரமித்து கொட்டகை போட ஏற்பாடு செய்தார். செஞ்சி பேரூராட்சியில் இருந்து செயல்அலுவலர், இளநிலை உதவியாளர், போலிசார், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் சென்று எதிரி ஆக்கிரமித்த 37 ச.மீ. அரசு புறம்போக்கு பாட்டை இடத்தை மீட்டோம். ஆக்கிரமிப்பை அகற்றும்போது மூவேந்திர பாண்டியன் செயல் அலுவலருக்கும் எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. அது சம்மந்தமாக செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**:

2. ஆஜர் எதிரி முனுசாமி ஏற்கனவே வீடு கட்டி நிலையாக குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. கொட்டகை தான் இருந்தது. நான் கூறிய 37 ச.மீ. இடத்திற்கு எதிரியின் பெயரில் பி மெமோ அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் கூறிய

முதல் விசாரணை விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நாங்கள் ஆக்கிரமிப்பை அகற்றியதாக கூறிய 37 ச.மீ இடம் இப்போது எந்த நிலையில் உள்ளது என்றால் அந்த இடத்தில் அங்கன்வாடி கட்டிடம் அரசால் கட்டப்பட்டுள்ளது. தேசூர்பேட்டையில் எந்த தெருவில் உள்ளது என்றால் 4 வது அல்லது 5 தெருவுக்கு இடையில் உள்ளது. அதற்கு பெயர் என்னவென்றால் கிருஷ்ணாபுரம் அங்கன்வாடி கட்டிடம். நான் கூறுவதுபோல் 37 ச.மீ இடத்தில் அங்கன்வாடி கட்டிடம் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறும் 37 ச.மீ. இடத்தில் உதவி ஆய்வாளர் ரகமதுல்லா என்ற போலிசார் அந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

3. செயல் அலுவலரின் கீழ் பணிபுரிந்ததால் அவருடன் நான் சென்றுள்ளேன் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் உதவி இயக்குனர் அனுப்பிய கடிதத்தை கொடுத்தேனா என்றால் அதுபற்றி தெரியவில்லை. உதவி ஆய்வாளர் ரகமதுல்லா அவருக்கும், செஞ்சியை சார்ந்த மஸ்தான் என்பவருக்கும் ஆதரவாக செயல்படும் நோக்கில் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பை அகற்றுவதாக செயல்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பிற்கு முன்பாக சட்டப்படியான அறிவிப்பு கொடுத்தோமா என்றால் அனுப்பிய நோட்டீசை எதிரி வாங்க மறுத்துவிட்டார். நாங்கள் கூறுவதுபோல் எந்தவொரு குற்ற செயலிலும் எதிரி ஈடுபடாத நிலையில் எதிரிக்கு எதிராக பொய்யாக குற்றம் சுமத்தி அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தார்களா என்றால் 18.07.2018 ந் தேதி விசாரித்தார்கள். அதன்பிறகு விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**: இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 46/2020**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கார்த்திகேயன் | தொழில் | : துப்புரவு வாகன ஓட்டுனர் |
| தந்தை பெயர் | :சுந்தர மூர்த்தி | சமயம் | : |
| கிராமம் | : செஞ்சி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 53 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சியில் பேரூராட்சியில் துப்புரவு வாகன ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மூவேந்திர பாண்டியன் செயல் அலுவலராக செஞ்சி பேரூராட்சியில் பணிபுரிந்தவர். தேசூர்பேட்டையில் உள்ள சர்வே எண்.11/1 ல் உள்ள கொட்டகையை செஞ்சி பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து செயல் அலுவலர் மற்றும் அதிகாரிகள் சென்று அந்த கொட்டகையை அகற்றினார்கள். அப்போது ஆஜர் எதிரி முனுசாமி கொட்டகையை அகற்றக்கூடாது என்று செயல் அலுவலரிடம் சண்டை போட்டுள்ளார். நான் அந்த சமயத்தில் துப்புரவு வாகனத்தை ஓட்ட சென்றுவிட்டேன். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

2. ஆஜர் எதிரி முனுசாமி ஏற்கனவே வீடு கட்டி நிலையாக குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. மரக்கழி 4 போட்ட கொட்டகை தான் இருந்தது. நான் கூறிய 37 ச.மீ. இடத்திற்கு எதிரியின் பெயரில் பி மெமோ அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் கூறிய முதல் விசாரணை விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு முன்பு நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நோட்டீஸ் கொடுத்துதான் அகற்றினார்கள். தேசூர்பேட்டையில் 60 அடி உள்ரோட்டில் உள்ளது என்றால் சரியல்ல.

தேசூர்பேட்டை ரோட்டிலேயே அந்த இடம் உள்ளது. ஆக்கிரமிப்பை அகற்றியதாக கூறிய 37 ச.மீ இடம் இப்போது எந்த நிலையில் உள்ளது என்றால் அந்த இடத்தில் அங்கன்வாடி கட்டிடம் அரசால் கட்டப்பட்டுள்ளது. தேசூர்பேட்டையில் எந்த தெருவில் உள்ளது என்றால் 3 வது அல்லது 4 தெருவுக்கு இடையில் உள்ளது. அதற்கு பெயர் என்னவென்றால் செஞ்சி டவுன் அங்கன்வாடி கட்டிடம். இவ்வழக்கின் மேல் அதிகாரியின் ஆலோசனைப்படி பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.Rமனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 46/2020**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :மணிவண்ணன் | தொழில் | : இரவு காவலர் |
| தந்தை பெயர் | :சுப்பிரமணி | சமயம் | : |
| கிராமம் | : செஞ்சி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 46 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சியில் பேரூராட்சியில் இரவு காவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மூவேந்திர பாண்டியன் செயல் அலுவலராக செஞ்சி பேரூராட்சியில் பணிபுரிந்தவர். தேசூர்பேட்டையில் உள்ள சர்வே எண்.11/1 ல் உள்ள கொட்டகையை செஞ்சி பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து செயல் அலுவலர் மற்றும் அதிகாரிகள் சென்று அந்த கொட்டகையை அகற்றினார்கள். நானும் சென்றேன். அப்போது ஆஜர் எதிரி முனுசாமி கொட்டகையை அகற்றக்கூடாது என்று தடுத்தார். பின்னர் ஆக்கிரமிப்பை நாங்கள் அகற்றினோம்.

**குறுக்குவிசாரணை:**

2. கொட்டகையை அகற்றும்போது பொதுமக்கள் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 40, 50 பேர் இருந்தார்கள். மேற்படி பொதுமக்களின் யாரையேனும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. உதவி ஆய்வாளர் ரகமதுல்லா, செஞ்சி மஸ்தான் ஆகியோர்களுக்கு ஆதரவாக செயல்படும் நோக்கில் சட்டப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் எதிரியின் குடியிருப்பை அகற்றி அவருக்கு எதிராக பொய் வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் அன்றைய தினம் விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.